# பாதிக்கப்பட்டோரின்

# குரல்...

இதழ் 03

இணைய சஞ்சிகை

**1 Million step challenge**

ஊர் கூடி நடந்த கதை...

வலியாற்றும் பயணம்...

பாதிக்கப்பட்டோரின் குழு முயற்சிகள்...

கொரோனாவால் இன்றும் தவிப்போர்...



Abi Diamonds

RAJ CLUSTER LTD

Links Legal Solicitors

# அறிமுகம்

2016 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பெரும்பாலான மாற்றுத்திறனாளிகளின் அமைப்புக்களை ஒருங்கிணைத்து Tamil Para Sports நிகழ்வுகளை நடாத்துவதில் இருந்து DATA வின் பயணம் ஆரம்பமாகின்றது.

ஆரம்பத்தில் மாற்றுத்திறனாளிகளை பேசு பொருளாக்கி அவர்களின் வாழ்வையும் அவர்களின் சோகங்களையும் அவர்கள் வாழ்வதற்காய் நடாத்தும் வலிமிகுந்த பயணத்தையும் வெளிக்கொண்டு வந்து அவர்களை பேசு பொருளாக்குவதே எமது நோக்கமாக இருந்தது.

அந்த பயணம் மேலும் விரிவு பட்டு எமது சமூகத்தில் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்ற ஏனைய தரப்பினரான பெண் தலைமைத்துவ குடும்பங்கள், பெற்றோரை இழந்த சிறார்கள், முதுமையில் வறுமையில் வாடுபவர்கள் என எமது பார்வை பரந்து சென்றது.

வாழ்வின் பெரும் சோகங்களை உடலில் தாங்கி உழைக்கும் வலு பெருமளவில் இழந்தவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு திட்டத்தை அறிமுகப்படுத்தி 55 பேருக்கு மாதாந்தம் ரூபா 5000 என நிதி உதவி செய்து வருகின்றோம்.

பாதிக்கப்பட்டோரில் பலர் தமது வாழ்விற்கு ஆதாரமாக சிறு தொழில்களை செய்து வருகின்றார்கள். அவர்களை இனம் கண்டு அவர்களின் தொழிலை விருத்தி செய்யவதற்கான பல முயற்சிகளை எடுத்து வருகின்றோம்.

பாதிக்கப்பட்டோர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து அவர்களுடன் பயணிக்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்தவர்களை ஒன்றாக அமர்த்தி பாதிக்கப்பட்டோர்களின் தேவைகள் குறித்தான பரந்து பட்ட புரிதலை ஏற்படுத்தும் முகமாக 2019 ஆம் ஆண்டு யாழ் நகரில் சுயமதிப்பீட்டு மாநாடு ஒன்றை நடாத்தினோம்.

கொரோனா (COVID-19) சூழ்ந்துள்ள இந்த நேரத்தில் எம்மோடு பயணிக்கும் எமது அமைப்புகளூடாக அவர்களின் பாதிக்கப்பட்டவர்களுக்கு எம்மாலான உதவிகளை செய்து வருகின்றோம்.

2021 இல் ஒரு நாளைக்கு 10,000 அடிகள் என்ற வீதத்தில் நடந்து 100 நாட்கள் தொடர்ச்சியாக நடந்து 1 million step challenge என்ற Charity Walk இனை நடாத்தினோம்.

மாற்றுத்திறனாளிகள் குறித்தான அடிப்படை புரிதல்கள் ஏற்பட்டு அவர்கள் குறித்தான சரியான தகவல் பகிரப்பட்டு பெருமளவில் தேவை உள்ளவர்களையும் அதே வேளை அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற உள்ளம் கொண்டவர்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு முயற்சியின் அடிப்படையில் எமது பணி நடைபெற்று வருகின்றது. அதன் ஒரு அங்கமாக www.emcharity.com என்ற இணையத் தளத்தின் மூலம் வடக்கு கிழக்கில் பணியாற்றுகின்ற அமைப்புகளின் தகவல்களை திரட்ட ஆரம்பித்துள்ளோம்.

தொடர்ந்து இந்த பயணம் தொடர்பான தகவல்களை இந்த இதழ் தாங்கி வருகின்றது...



# எமது இணையங்கள்

Tamil Para Sports

www.tamilparasports.com

மாற்றுத்திறனாளிகளை பேசு பொருளாக உருவாக்கி அவர்களுடைய ஆற்றலை வெளிக்கொண்டு வரும் ஒரு பெரும் நிகழ்வின் தகவல்களை தாங்கிய இணையம்.

DATA CHARITY

www.datatamil.com

பாதிக்கப்பட்டோரின் வாழ்வாதார முயற்சிகளை இந்த இணையத்தில் காணலாம். அவர்களின் முயற்சிக்கு உங்களாலான உதவிகளை இந்த இணையத்தின் மூலம் வழங்கலாம். அதே வேளை முற்றாக உழைக்கும் வலு இழந்து போய் உள்ள மாற்றுத்திறனாளிகளின் தகவல்களையும் இங்கு காணலாம்.

EmCharity

www.emcharity.com

இதயங்களை இணைக்கும் இணையம். பாதிக்கப்பட்டோருக்காக பாடு படும் அமைப்புகளின் ஒரு தகவல் திரட்டு. வடக்கு, கிழக்கு எங்கிலும் இருக்கின்ற அமைப்புக்கள் அவைகளின் தொடர்பு தகவல்களை இந்த இணையத்தில் காணலாம்.

குரல்..!

www.kuralkal.com

பாதிக்கப்பட்டோர் சந்திப்பதையும் சாதிப்பதையும் தாங்கி வரும் இணையம் பாதிக்கப்பட்டோரின் குரலாக ஒலிக்கின்றது.

# தங்க வியாபாரம்... தங்கமான மனசு...
# எங்கள்தமிழ் பரா விளையாட்டுப்போட்டியின் பிரதான அனுசரணையாளர்

Abi
DIAMONDS &
Abis CASH & CARRY

தங்க வியாபாரம் பெருகுவது போல்... மாற்றுத்திறனாளிகளின்
வியாபரத்தை பெருக்கும் நோக்கில்...
சுழற்சி முறை மேம்பாட்டுத்திட்டத்தின் முக்கிய முதலீட்டாளர்...



**301 - 305 Northolt Road South Harrow HA2 - 8JA LONDON UK**
**Telephone : 00442084230055**



# குறைந்தபட்ச திறன்களைக் கொண்டவர்களையும் உதவிகளுக்கு உள்வாங்குவோம்




உடல் அங்கவீனம் தொடர்பான உலகளாவிய அறிக்கையானது, இலங்கையின் சனத்தொகையில் 12.9% ஆனோர் அங்கவீனமான நபர்கள் என மதிப்பிடுகிறது. எனினும், இலங்கையின் கிழக்கு, வடமத்திய மற்றும் வட மாகாணங்களில் இந்த மதிப்பீட்டினைக் காட்டிலும் அதிகளவான அங்கவீனமான நபர்கள் இருப்பதாக பரவலாகக் கருதப்படுகிறது. அங்கவீனமுற்றோரில் பெரும்பாலானோர் வசதிகுறைந்தவர்களாகக் காணப்படுவதுடன், அவர்களுக்கான கல்வி, திறன் அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு போன்றவை மட்டுப்படுத்தப்பட்டதாகவே அமைகின்றன.

மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வில், 1% இற்கும் குறைவான அங்கவீனமான நபர்கள் மாத்திரமே தொழிலாளர் படையில் பங்களிப்புச் செய்வதாகச் சுட்டிக்காட்டப்படுவதுடன், அதில் பெண்களின் பங்களிப்பு 0.2% இற்கும் குறைவாகவே காணப்படுகிறது. அத்தோடு 4 மாவட்டங்களிலிருந்தும் சுற்றுலாத் துறை சார்ந்த திறன் அபிவிருத்திப் பயிற்சிகளுக்கு எந்தவொரு அங்கவீனமான நபரும் விண்ணப்பிக்கவில்லை என்பதையும் இந்த ஆய்வானது வெளிப்படுத்தியிருந்தது.

போதிய அனுபவமின்மை மற்றும் பயிற்சியளிப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச திறன்களைக் கொண்டிராமை காரணமாக அங்கவீனமான நபர்களைப் பணிக்கமர்த்துவதில் தாங்கள் ஆர்வம் காட்டுவதில்லை என தொழில்தருனர்கள் குறிப்பிடுகின்றனர். அவர்களில் நான்கில் ஒருபகுதியினர் மாத்திரமே போதியளவு முன் அனுபவமுள்ள அங்கவீனமான நபர்களைப் பணிக்கமர்த்துவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இலங்கையில் அங்கவீனம் தொடர்பான சட்டபூர்வ பகுப்பாய்வானது அங்கவீனர்களது உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான அதிகாரச் சட்டத்தில் பின் வருமாறு குறிப்பிடப் படுகின்றது. அங்கவீனர் எனப்படுபவர், சகஜமாக உண்டாகிய, சரீர ஆற்றலின் மற்றும் மன ஆற்றலின் ஏதோவொரு குறைபாடு காரணமாக வாழ்க்கையின் தேவைகளை முற்றாகவோ அல்லது பகுதியளவிலோ தம்மாலோ அல்லது தமக்காகவோ நிறைவேற்றிக் கொள்ள முடியாத ஒருவர் ஆவார்' என் பது கருத்தாகும்.

சகல மனிதர்களும் சுதந்திரமாகவே பிறப்பை எய்துவதுடன் அபிமானத்திலும் உரிமையிலும் சம பங்குடையவர் ஆவர். அவர்கள் தர்க்க மற்றும் மனச்சாட்சி உள்ளவர்களாக இருப்பதுடன் சகோதரப் பாங்குடன் ஒவ்வொருவரும் இருத்தல் வேண்டும் என 1948 டிசெம்பர் 10 ஆந் திகதிய மனித உரிமைகள் தொடர்பான உலகப் பிரகடனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் சமுதாயத்தினரிடையே அங்கவீனர்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனர்களைப் பாதுகாப்பதற்கான அதிகாரச்சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. சமூக வலுப்படுத்தல் அமைச்சின் கீழ் வரும் அங்கவீனருக்கான தேசிய செயலகம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் என்பன இதனை அமுலாக்க உதவுபவையாக இனங்காட்டப்பட்டுள்ளன.

அங்கவீனம் தொடர்பான தேசிய கொள்கையின் வாயிலாக சமூக நியாயத்தின் பெயரில் அங்கவீனர்களது உரிமைகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் என்பன நடைபெறுகின்றன. பரிபூரணமானதும் திருப்தியளிப்பதுமான வாழ்க்கை வாழ்வதன் மூலம் இலங்கையில் சமமான பிரசையாக தமது அறிவு, அனுபவம், விசேட நிபுணத்துவம் மீதான ஆற்றலை தேசிய அபிவிருத்திக்கென பங்கிடும் சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைத்துள்ளது.

அங்கவீனர்கள் மற்றும் அவர்களது அமைப்பு மற்றும் பெற்றோரது அமைப்பு என்பவற்றை வலுவூட்டுதல் இக் கொள்கையின் பிரதான மூல தர்மமாகும். அது ஆக்கபூர்வமாக செயற்படுத்தப்படும்போது அதற்கு மூலமாக அமைவது வலுவூட்டல் ஆகும்.

வலியாற்றல் திட்டம் என்கின்ற உதவித்திட்டத்தை டேட்டா (DATA) அமைப்பினர் தற்போது முன்னெடுத்துள்ளனர். இந்த அமைப்பை பொறுத்தவரை வடக்கு கிழக்கில் தற்போது 50 பேர் வரை இனம்காணப்பட்டு அவர்களுக்காக மாதாந்தம் 5000 ரூபா வழங்கப்படுகிறது, இந்த உதவி குறிப்பாக அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூக இணைப்போடு மிக நெருங்கி வருகிறது இது ஒவ்வொரு பாதிக்கப்பட்டவர்களின் உடல் உள செயற்பாடுகளில் மிகுந்த உதவியை ஏற்படுத்தியுள்ளதாக அவர்களே தெரிவித்துள்ளமை திருப்தியான விடயம் .

இந்த திட்டத்தின் கீழ் 3 அங்கங்கள் பாதிக்கப்பட்ட 5 பேர், இரண்டு கால்களையும் இழந்த 5 பேர், முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டு இடுப்புக்கு கீழ் இயங்காத 21 பேர், கழுத்துக்கு கீழ் இயங்காத 2 பேர், இரண்டு கைகளும் இல்லாத 14 பேர், இரண்டு கண்களின் பார்வையையும் இழந்த 2 பேர், மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் என 50 பேரை உள்ளடக்கி இந்த உதவித்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகிறது .இதே போல் காலப்போக்கில் சமூகத்தில் இருக்கும் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இப்படியான முழுமையான பராமரிப்பு உதவிகள் கிடைக்க வேண்டும் என்பதே அனைவரின் ஆவலும்..!

**பிரியமதா பயஸ்**
**(ஊடகவியலாளர், இலங்கை)**






## Jeevah Haran
## Solicitor

**Jeevah@linkslegal.co.uk**
**0044 7957289061**
**www.linkslegal.co.uk**

Leasehold · Landlords · Mortgage · Solicitor · உயில் · 07957 289 061 · Gift of Property
07957 289 061 · Lawyer · Friendly · Immigration · Professionalism · Contract · குத்தகை · Family Law · Knowledgeable
Jeevah Haran · Skilled · பொது சர்ச்சை · வாங்குதல்
Deeds · Freehold · வீடு · Selling · Conveyancing · Client Care
Jeevah Haran · Buying · Confidentiality · உறுதிகள் · Expert · சட்ட ஆலோசனை
Legal Advice · குடி வரவு · Property Law · 07957 289 061 · விற்றல் · Business Transfer · Tenants
Buy-to-Let · Competitive · Fees · Credible · Selling House · Agreement · Property Law · Jeevah Haran
Wills and Probate · Selling Shop · Buying House · Civil Litigation · Buying Shop · குடும்ப சர்ச்சை
Competent · Skilled · Jeevah Haran · கடை

# விரைந்து செல்வோம்



இலங்கை என்பது எம் தாய் திரு நாடு. அங்கு நாம் வாழ்ந்திருந்த காலம் எம் நினைவுகளின் கூடு. பாடும் குயிலும் பனை மர காடும் நாம் ஓடித் திரிந்த வீடும் எம் நினைவில் வர மனம் தானாக வாடும்.

அந்த நினைவுகளைத் தேடி.....

அங்கொன்றும் இங்கொன்றுமாய் அவர்களுக்கென்றே பூத்திருந்த மாம்பூவில் ஒற்றை அணில் எட்டிப் பாய்ந்ததை செம்பும் தண்ணியுடன் வாய் கொப்பளிக்க வாசலுக்கு வந்த ஆச்சி கண்கொண்டு பார்த்து மண்ணில் விழுந்த மாம்பூவை எண்ணி எண்ணி எடுத்து அணிலுக்கு கல் எறிய....

ஆச்சி விட்டெறிந்த கல், அங்கு கூட்டமாக வந்திருந்த புலுனிகளிடம் புலன் விசாரணை செய்ய, அவை ஒற்றுமையாய் பறந்து சென்று மதிலுக்கு அழகு சேர்க்க அமைதியாக உட்கார்ந்து பதிலளிக்க,

ஆரவாரமானது ஆச்சி வீட்டு முற்றம்

ஆஹா.... ஆஹா.... எழில் கொஞ்சும் அனுபவங்கள் அத்தனையும் அங்கிருக்க, தூரமாய் எங்களை நாம் தூக்கி வந்த பின்னும் துரத்தி விட முடியுமா தூய்மையான அந்த நினைவுகளை?

குயிலோடு விளையாடி அணிலோடு மல்லுக்கட்டிய அன்னம்மா ஆச்சிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்த அழகர் அப்பு. அட அட என்னத்தை நான் சொல்லுவேன். எதை எதையென்று சொல்லுவேன்.

மீன் வாங்கப் போனவர் **“கன தூரமில்லை அன்னம் இதில இதில தான், இப்ப நான் வந்திடுவன்”** என்று சொன்னவரை இன்னும் காணவில்லை.

உச்சி வெயில் இன்று உச்சத்தில் ஏறி நடு மண்டையில் சூடேறுது.

நாளுக்கு முளுக்கென்று கிடாரத்தில் கொதிக்க வைத்த சுடு தண்ணியும் சும்மா கிடந்து ஆறுது. சீயக்காய் அவித்து வைத்து அதுவும் ஆறி ஊறி கிடக்குது என்று சொல்லிச்சு சொல்லி அப்புவைத் தேடி படலையை திறந்த அன்னம்மா ஆச்சி ஒழுங்கையில் எட்டிப் பார்க்க பாட்டுச் சத்தம் கேட்கிறது.

அடியே..... நில்லுன்னா நிக்காதடி... இந்த உடம்புதான் அடியே அது நில்லுன்னா நிக்காதடி... என்று அப்புவுக்கு முழு மப்பு... ஏத்த இறக்கத்துடன் அப்புவின் பாட்டு வேற லெவல்...

பாட்டுச் சத்தம் பல மாதிரி இருக்க பக்கத்து வீட்டு நாயும் தன் குரலில் சுருதியை ஏத்தி ஒழுங்கைக்கு வர அப்பு கொண்டு வந்த மீன் நழுவி சரையோடு தரையில் விழ நன்றி சொல்ல முன்னரே நாய் மீனை ருசி பார்த்ததை பார்த்த ஆச்சிக்கு எப்பிடி இருந்திருக்கும்.

உறவுகளே ஒற்றைப் படகில் நாம் ஏறியதால் ஊரை விட்டுப் பிரிந்தோம் கையில் உயிர் இருக்க தெரியாத ஊருக்குத் தெரிவாகி வந்தோம்.

உறவுகளே ஒற்றைப் படகில் நாம் ஏறியதால் ஊரை விட்டுப் பிரிந்தோம் கையில் உயிர் இருக்க தெரியாத ஊருக்குத் தெரிவாகி வந்தோம்.

ஆனாலும் அந்த ஆழமான நினைவுகளும் ஆலமரம், வாழை மரம், அரசடியில் புளியமரம், வயல் வெளியில் கிளிக்கூட்டம் வாழ்ந்த மண்ணின் வாசம். எப்படி மறப்பது? எதை எதையென்று மறப்பது? இருந்தாலும் என்ன மீட்டெடுத்த அந்த அழியாத நினைவுகளோடு இன்னும் அந்த மண்ணில் எம் சொந்தங்களாக ஏதோ ஒரு சோகத்தில் நாளும் தவிக்கின்ற உறவுகளையும் கொஞ்சம் எண்ணிப் பார்ப்போம்.

அவர்களுக்கு நடந்தது என்ன? கண்கள் இருந்தன... கால்கள் இருந்தன... இரண்டு கைகளும் இருந்தன... ஆனால் இப்போது இல்லை. எப்படி வாழ்வது? அவர்களின் வாழ்க்கையை நகர்த்துவது யார்? கொஞ்சம் சிந்திப்போம்.

அவர்களுக்கு கை கொடுக்க எம்மால் என்ன செய்ய முடியும் என்று சிந்தித்துப் பார்த்தால். எம்மால் முடியும். எங்களால் மட்டும்தான் முடியும்.

அவர்களுக்காக எம் பொன்னான நேரத்தில் கொஞ்சத்தை ஒதுக்கி காலம் எம்மைக் கட்டிப் போட்ட இந்த கொரோனாவுக்கு ஒதுங்கி, பாதிக்கப்பட்டோரின் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை உருவாக்க நம் எல்லோருக்கும் நலன் தரும் நடைப் பயிற்ச்சியை நாளும் நாம் எடுத்து நூறு நாட்களில் ஒரு மில்லியன் காலடிகள் பதித்து சரித்திரம் படைப்போம்.


**சவாலை கையில் எடுத்து பாதிக்கப்பட்டோருக்காக நிதி திரட்டுவோம்.**
**அள்ளிக் கொடுக்கவிட்டாலும் நாம் கிள்ளி கொடுப்போம்.**
**விழுந்து கிடப்பவரை கை கொடுத்து தூக்கிவிட**
**வாருங்கள் உறவுகளே விரைந்து செல்வோம்.**

அருள்நிலா வாசன்
(இங்கிலாந்து)




MIA
MORTGAGE
INSURANCE ADVISERS
Residential mortgages | Buy to let & Portfolio Mortgages
Protections | Commercial & Business Mortgages
FIBA
Financial Intermediary & Broker Association
NACFB
Helping Fund UK Business
You can expect the highest level of professional service from our qualified advisers in all aspects of our services
TEL NO : 020 8429 4000
ADDSTONS LTD T/A MIA MORTGAGE INSURANCE ADVISERS
21 MASONS AVENUE ,WEALSTONE ,MIDDLESEX ,HA3 5AH
THE MORTGAGE IS SECURED AGAINST YOUR PROPERTY , IT COULD BE REPOSSESSED, IF YOU DO NOT KEEP UP THE MORTGAGE REPAYMENTS

# இருள் காணாத இரவுகள்...



நீ நடக்க நினைத்ததெல்லாம்
நான் நடந்து முடித்தேன்
உன் மண் படாத பாதங்கள்
நான் சுமந்து நடந்தேன்...

ஒரு அடி உனதென்றால்
மறு அடி எனதாகும் ~ உன்
ஊன்றுகோல் உடைத்தெறிந்து
உன்னோடு உலகளப்பேன்...

ஒரு நூறு கோடி அடிகள்
அது எனக்கு கணக்கல்ல
உன் கைதாங்கி உலகின்
மறு கோடி காண்பேன்
அதுவே எனக்கு இலக்காகும்

விருப்பத்துக்கு மாறாக இருளால் கவ்வப்படும் அந்த மாலைப்பொழுது தன் முன்னே பரிதாபமாக மறைந்து செல்வது போல் தோன்றியது ராகவனுக்கு.

புதிதாக வண்ணம் பூசப்பட்டு சில தினங்களாக அழகாக பரிணமிக்கும் அந்த வீடு ராகவனின் கண்களில் நீரை நிறைத்தது.

அவன் வீட்டுக்கு எதிர்ப்புறமாக வலது பக்கத்தில் நான்கு வீடுகள் தாண்டி அமர்ந்திருந்தது அவன் சுகந்தி வாழ்ந்த அந்த வீடு.

இன்றைக்கு இருப்பத்தியெட்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள்!

சிவந்த கண்கள், கலைந்த கேசம், இருள் கவ்விய முகத்துடன் அவன் வீட்டை அவள் ஏக்கத்துடன் பார்க்க, சுகந்தி பலவந்தமாக காரில் ஏற்றப்பட்ட காட்சி, ஈரம் காயாத சோக ஓவியமாக அவன் இதயத்தில் நிரந்தரமானது.

இருவர் குடும்பங்களும் நிறையவே வசதி படைத்தவர்கள். சுகந்தியின் குடும்பத்தில் பரம்பரை வக்கீல் தொழிலினால் செல்வம் புரண்டது. ராகவனின் குடும்பமோ விவசாயம், தோப்பு பண்ணை என பூமித்தாயின் கருணையால் வளம் கொழிக்கும் குடும்பம்.

இருவருக்கும் காதல் மலர்ந்து மணம் பரப்பிய போது இரண்டு குடும்பங்களும் ஒன்று சேர்ந்து இருவரையும் அணைத்துக் கொண்டது.

திருமண நாளும் நிச்சயிக்கப்பட்டு ஊரே கூடி மகிழ்ந்து குதூகலித்து இருக்கையில் தான் அந்த விபரீதமும் நடந்தது.

ராகவன் எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளாகி ஒரு காலை இழக்க இரண்டு குடும்பங்களும் திணறி மூலைக் கொன்றாக முடங்கிப் போனார்கள்.

சோகத்தில் நாள்கள் மெதுவாக நகர வேகமாக அன்பும் அனுதாபமும் குறைந்து சுகந்தியின் குடும்பம் மெல்ல மெல்ல விலக ஆரம்பித்தது. காதலுக்கு தடைபோட திருமணமும் கனவாகிப்போனது.

சுகந்தி தன் காதலுக்காக தன் உயிரைக் கொடுத்து போராடினாள். கால் ஊனமுற்ற ஒருவனை தங்கள் மகளுக்கு மணமகனாக ஏற்க மறுத்து சுகந்தியின் காதலுக்கு தங்கள் பாசத்தினால் விலைபேசி மறுத்து விட்டார்கள் அவளின் பெற்றோர்கள்.

ராகவனுக்கும் அவர்கள் எடுத்த முடிவு நியாயமாகபடவே காதல் தந்த வலியையும் ஏற்றுக்கொண்டான்.

இரண்டு வருடங்கள் கடந்தும் சுகந்தி தன் காதலை விட்டுக் கொடுக்காது அடம்பிடிக்கவே, வேறு வழியின்றி மனம் மாற்றம் வேண்டி அவளை பலவந்தமாக அழைத்துக் கொண்டு அந்த ஊரை விட்டே போயிருந்தது சுகந்தியின் குடும்பம். அதன் பின்னர் சுகந்திக்கு என்ன நடந்தது, எங்கே இருக்கிறாள் என்ற விபரம் யாருக்குமே தெரியாமல் போய்விட்டது.

வருடங்கள் பல கடந்து தந்தையும், தொடர்ந்து தாயையும் இழந்து தனிமரமான போது தான் ராகவனின் வாழ்க்கையில் மல்லிகா பிரவேசித்தாள்.

ராகவனின் அன்புக்கும் பண்புக்கும் முன்னால் அவனின் காலின் ஊனம் அவளுக்கு ஒரு பொருட்டாகவே தெரியவில்லை.

ஒரு நாள் தன்னை திருமணம் செய்து கொள்ள சம்மதமாவென மல்லிகா கேட்டபொழுது, ராகவனும் தன்னையறியாது தலையாட்டி சம்மதம் தெரிவித்தான். அன்று வரை காத்திருந்த வசந்தம் அவன் வாழ்வில் அன்று முதல் வீசத் தொடங்கியது.

வீட்டில் திண்ணையில் அமர்ந்திருந்த ராகவனும் மல்லிகாவும் இதை எதிர்பாராததால் திகைப்புடனும் அதிர்ச்சியுடனும் எழுந்து நின்றனர்.

சுகந்தி ஊருக்கு திரும்பவும் வருகிறாள் என்ற செய்தியறிந்த நாள் முதலாக அவனுள் வெளியில் சொல்ல முடியாத ஒரு பரபரப்பு.

அதை மறைக்க முயன்று சமயங்களில் தோற்றுப் போகும் ராகவனின் பரிதவிப்பை மல்லிகா இரசித்துக் கொண்டிருந்தாள்.

சுகந்தியின் மேல் இருந்த காதல் அதன் புனிதத்தால் ஏற்பட்ட தாக்கத்தை பலமுறை அவனே மல்லிகாவிடம் கூறியிருக்கின்றான். அதனால் மல்லிகாவும் அவர்கள் இருவரும் எப்படியாவது சந்திக்க வேண்டும் என்கின்ற ஆதங்கத்தில் இருந்தாள்.

சுகந்தி இப்பொழுது எப்படி இருப்பாள்! அவள் கணவன் குழந்தைகள் எப்படி இருப்பார்கள். தன்னோடு கதைப்பதற்கு விரும்புவாளா! ஒதுங்கிப் போவாளா! என பல பல எண்ணங்களாலும் கேள்விகளாலும் குழம்பிப் போயிருந்தான் ராகவன்.

சுகந்தியின் வீட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ராகவனிடம் நெருங்கி வந்த மல்லிகா, அவன் தோள்பட்டையில் இடித்தவாறே “என்ன அவசரம், நாளைக்கு வந்து விடுவார்கள் என்று கேலி செய்ய மெல்லிய புன்சிரிப்புடன் கைத்தடியை ஊன்றியவாறு அருகே இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டான்.

அந்த நாளும் வந்தது. அவன் வீட்டின் முன்னால் வந்தததும், காரை நிறுத்தும்படி கூறிய சுகந்தி பின் கதவை திறந்த வண்ணம் இறங்கினாள்.

ஓர் கலக்கமுமில்லாமல் இருவரையும் நோக்கி மெல்லிய புன்னகையொன்றை உதிர்த்தபடி காரின் முன் கதவை திறந்து அவளின் கணவனை இறங்குவதற்கு உதவி செய்த பொழுது ராகவன் முற்றாக உடைந்தே போனான்.

தடுமாறி விழப்போன அவனை மல்லிகா தன் தோளோடு தாங்கிக் கொண்டாள்.

வெள்ளைப் பிரம்புடன் கண்கள் இரண்டிலும் பார்வையற்ற தன் கணவனை மெல்ல அணைத்து உள்ளே அழைத்து வந்தாள் சுகந்தி!

பூதத்தம்பி ராஜ்குமார்
(இங்கிலாந்து)



# BRIT BRICKS

RESIDENTIAL PROPERTY

SALES , LETTINGS , MANAGEMENT

Web : www.britbricks.co.uk

**TEL NO : 020 8429 4000**

E : admin@britbricks.co.uk

BRIT BRICKS LTD,21 MASONS AVENUE ,WEALSTONE ,MIDDLESEX ,HA3 5AH

We offer rent protection (rent guarantee & legal cover ) for landlords who takes up our standard management services & pay our standard management fees.

*WE CAN COVER ANYWAY WITHIN UK*

WE ARE MEMBERS OF

The Property Ombudsman safeagent DPS

WE ADVERTISE ON

Zoopla OnTheMarket



**இன்பம் விழையான் வினை விழைவான் தன் கேளிர்**

**துன்பம் துடைத்து ஊன்றும் தூண்.**

**(அதிகாரம்:- ஆள்வினை உடைமை)**

**குறள்:- 615**

இன்பத்தை விரும்பாதவனாய்ச் செயல் செய்வதையே விரும்புபவன், தன் உறவும் நட்புமாகிய பாரத்தின் துன்பத்தை போக்கி, அதைத் தாங்கும் தூண் ஆவான்.

செயலை மட்டும் இலக்காக கொள்வோர் தமது உறவுகளின் துன்பம் துடைத்துச் காக்கும் தூண் போன்றவர்.

அன்பினால் அகிலத்தை ஆள்வோம். ஆன்பினால் உறவுகளை உருவாக்குவோம். அன்பினால் உருவாகும் அக்கறைகளே செயற்பாடுகளுக்கான உந்துதலாக அமையும். வாழ்வாதாரம் இழந்த உறவுகள், தம் அடிப்படை வசதிகள் மற்றும் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றி கொள்ள முடியாத அந்தர நிலையில் வாழும் குடும்பங்கள், மனைவி குழந்தைகளுக்கு உணவூட்ட முடியாத கையறு நிலையில் காணப்படும் அங்கவீனர்களாக குடும்பத்தலைவர்கள், விடியல் எங்கே? என்றும் ஏங்கும் பெண் தலைமைத்துவ தாய் நெஞ்சங்கள், எத்தனை எத்தனை?

அறிவு ரீதியான, தர்க்க ரீதியான விவாதங்கள், நீண்ட கால நோக்கில் பொருளாதார ரீதியான வினாக்களுக்கான விடைகளை நோக்கிய பயணங்களுடன் இதயத்தால் முன் வைக்கும் தீர்வுகளும் இன்றியமையாதவை.

நிலவினில் முதல் கால் பதித்த நாளினை நினைவு கூருங்கள் நண்பர்களே நிலவினில் பதித்த ஒரு அடி, எத்தனையோ கோடிகள் அடிகள் தொழில் நுட்பப் பாதையில் முன்னேறியதால், அம்புலியில் அவ் ஆரம்ப அடியை வைக்க முடிந்தது.

நாம் வைக்கும் அடிகள் துயருறும் உள்ளங்களைத் தேற்றுவதற்குரிய முன்னோடி அடிகளாக சின்னஞ்சிறு மழலைகள் முகத்தில் சிறு புன்முறுவல்களாக, தாயின் நெஞ்சின் பாரத்தை சிறிதளவேனும் குறைக்குமாயின், தன் குடும்பத்திற்காய் கண்ணீர் விடும் தந்தையின் கண்ணீரைத் துடைக்குமாயின், நடையினை நேசிப்போம்!

கல்விப் பசியில் தவிக்கும் சிறார்களுக்கு அறிவு ஒளி வழிகாட்டுமெனில் நடையினை நேசிப்போம்!

கைம்பெண்களின் கண்ணீர் துடைத்து, வாழ்வில் வழிகாட்டுமெனில், நடையினை நேசிப்போம்!

அங்கவீனர்களுக்கு, ஊன்று கோலாகவும், கண்ணிலார்க்கு வழிகாட்டி கை கொடுக்குமெனில் நடையினை நேசிப்போம்!

உங்கள் ஒவ்வோர் அடியும், உதவிக்கரங்களாக, உதவுகின்ற இதயங்களை இதயபூர்வமாக ஒன்றிணைக்கட்டும்.

**இனம், மதம், மொழி, தேசம் கடந்து,**
**“நான்” நீங்கி “தாமாக”**
**“நாம்” எனும் ஒன்றுபட்ட உணர்வில் சங்கமிப்போம்.**
**எங்கு தேவை உளதோ, எங்கு துன்பம் உளதோ**
**அங்கு உங்கள் உதவிக்கரங்கள் நீளட்டும்**
**ஆதலால் நண்பர்களே!**
**நாம் நடப்போம்**
**நமக்காக நடப்போம்**
**நமக்காக மட்டுமன்றி**
**நம் அடிகளால்**

**அடிகளால் உலகளப்போம்**
**அடிகளால் ஒன்றிணைவோம்**
**அடிகளால் துயர் களைவோம்**
**அடிகளால் உதவிடுவோம்...**

யதுநந்தன் கணேசலிங்கம்
(இங்கிலாந்து)



Ceylon Silks
SILKS FOR ALL OCCASIONS
Muhurtham
by
CEYLON SILKS
020 8617 9400 | 0771 346 1532
278 Ewell Road, Surbiton KT6 7AG




innovay
beyond expectations
Right Choice For Your
WEBDESIGN &
DEVELOPMENT
www.innovay.com | info@innovay.com

# இசைச்சமர் - 2020

## எமக்காக பாடியவர்கள்

### Team Red



*Nenusha Gajendran*

*Nirmith Narayanamoorthy*





*Niveda Balakumar*

*Mathangi Jegatheeswaran*





*Varunavy Thavaganesh*

# இசைச்சமர் - 2020

## எமக்காக பாடியவர்கள்

### Team Yellow



*Aarani Jeevanathan*



*Parkavi Thillairajan*



*Sabira Muralitharan*



*Sanusha Ravi*



*SG Shan*


# இசைச்சமர் - 2020

## எமக்காக பாடியவர்கள்

### Team Blue



*Abinaya Mathanarajah*



*Acshayaa S Kumar*



*Ananya Rajeenthirakumar*



*Pruthushan Premakumar*



*Tharaniya Sivarajah*

# இசைச்சமர் - 2020

## எமக்காக பாடியவர்கள்

### Team Black



*Lakshanyaa Nithikaran*

*Nilakshika Mohanathas*





*Mathulani Fernando*

*Piraveenan Kirupakaran*





*Saranga Gajendrakumar*

# இசைச்சமர் - 2020

## எமக்காக பாடியவர்கள்

## Guest Singers



*Sainthavi Rajananthakumar*

*Abheethaa Navaneethan*





# வலியாற்றல் திட்டம்

## பயனாளிகள்

**55**

மூன்று அவயவங்களும் பாதிப்பு அடைந்தவர்கள்
**5**

இரண்டு கால்களும் இழந்தவர்கள்
**5**

இரண்டு கண்பார்வை இழந்தவர்கள்
**2**

முள்ளந்தண்டு வடம் பாதிப்பு -இடுப்புக்கு கீழ் இயக்கமில்லை
**18**

இரண்டு கரங்களும் இழந்தவர்கள்
**15**

முள்ளந்தண்டு வடம் பாதிப்பு -கழுத்துக்கு கீழ் இயக்கமில்லை
**9**

மனநலம் பாதிப்பு அடைந்தவர்கள்
**1**

# RAJ CLUSTER LTD




**Trade Name of Shell Forecourts in Hampshire & Surrey**

www.rajcl.com info@rajcl.com

**SHELL FLEET**
22 Fleet Road
Fleet
Hampshire, GU51 4QG
Tel: 01252 617 577

**SHELL FLEET ROAD**
171 Cove Road
Fleet
Hampshire, GU51 2SH
Tel: 01252 615 686

**SHELL FARNBOROUGH**
326 Farnborough Road
Farnborough
Hampshire, GU14 8BD
Tel: 01252 549 645

**SHELL CODY**
22 Farnborough Road
Farnborough
Hampshire, GU14 6AY
Tel: 01252 547 640

**SHELL FOLLY HILL**
Odiham Road, Upper Hale
Farnham
Surrey, GU10 5AB

**SHELL OLD WOKING**
65 High Street
Old Woking, Woking
Surrey, GU22 9LN
Tel: 01483 728 603

**SHELL OTTERSHAW**
Guildford Road
Ottershaw
Surrey, KT16 0PG
Tel: 01932 873 758

**SHELL MEADOWS**
Woodbridge Road
Guildford
Surrey, GU1 1EF
Tel: 01483 459 280

**SHELL LADYMEAD**
14 Ladymead Road
Guildford
Surrey, GU1 1DL
Tel: 01483 458 442

**SHELL TOPCLIFFE**
Portsmouth Road
Peasmarsh, Guildford
Surrey, GU3 1LZ
Tel: 01483 457 293

**SHELL HORSLEY**
Guildford Road
Leatherhead
Surrey, KT24 6TA
Tel: 01483 280 759














# Tamil Para Sports Supporters